10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 268 வெள்ளிக்கிழமை 16 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48



## கையில் விஷத்துடன் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 16

வட மாகாண தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வட மாகாண சபையின் 06▶

# இன்னும் சில தினங்களில் ஆட்சி மாற்றம்




## கைக்கு மொட்டு உதவுமாம்

கொழும்பு, பெப்,16,

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்த எதிரணியும் இணைந்து புதிய அரசாங்கம் அமையவுள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் திங்கள் இரவு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அமையவுள்ள புதிய அரசாங்கத்தில் எந்த அமைச்சுப் பதவிகளையும் பெறாது சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளிக்க மகிந்த ஆதரவு அணி சம்மதித்துள்ளது. எனினும் இது தொடர்பில் உத்தியோகபூர்வமான தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இது தொடர்பில் 06▶

## கட்சி சொல்லே கேட்பேன்

### சிறில் சொல்கிறார்



யாழ்ப்பாணம், பெப். 16

'யாழ். மாநகர மேயர் நியமனத்தில் கட்சியின் முடிவே இறுதியானது. அதற்கு நாம் கட்டுப்படுகிறோம்" தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ். மாநகர சபையின் புதிய உறுப்பினராகத் தெரிவானவருமான சொலமன் சூ. சிறில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் ஆட்சியைக் கைப்பற்றுவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தீவிரம் காட்டி வருகின்றது. 06▶

## 15 ஐ.தே.கவினர் நாளைக்குள் சு.கட்சியின் பக்கம் தாவுவர்

### பிரதியமைச்சர் நிஷாந்த சொல்கிறார்



கொழும்பு, பெப்.16,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் உருவாக்கப்படும் தனி அரசாங்கத்தில் இணைவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவ உள்ளனர். அடுத்த 24 மணி நேரத்துக்குள் இது நடக்கும். இவ்வாறு உறுதிபடத் தெரிவித் 06▶

## கூட்டமைப்பையும் முன்னணியும் சேருமாறு முதலமைச்சர் அறிவுரை



யாழ்ப்பாணம், பெப். 16

"கொள்கை ரீதியான கட்சிகள் சேர முடிந்தால் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து சிறிய கட்சிகளோ அல்லது பெரிய கட்சிகளோ தேசியம் சார்ந்த கட்சிகள் ஒன்றிணைந்து மக்களுக்கு சேவையாற்ற முன்வர வேண்டும்".

இப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைம் இணைந்து செயற்படுமாறு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் சூசகமாக எடுத்துரைக்கிறார்.

உள்ளூராட்சி சபைகளில் தனித்து 06▶

## மத்தியின் நெருக்கம் மாநகரிலும் தொடரும்

யாழ்ப்பாணம், பெப்.16,

யாழ். மாநகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைக்க ஐக்கிய தேசியக் கட்சி நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் என அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கின் பல சபைகளில் அறுதிப் பெரும்பான்மை எவருக்கும் கிடைக்கவில்லை. இதனால் குழப்ப நிலை நீடித்து வருகின்றது.

இந்நிலையில் அதிக ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாநகர சபையில் ஆட்சியமைக்க ஈ.பி.டி.பி. 6 மாதங்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக அறிவித்தது. நிர்வாகத் திறனைப் பார்த்து தொடர்ந்து ஆதரிப்பதா? இல்லையா என்பது முடிவு செய்யப்படும என்வும் அக்கட்சி அறிவித்தது.

இந்நிலையில் மத்தியில் ஆட்சியமைத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி வருகின்றது. இதனால் அக்கட்சியின் சார்பில் யாழ். மாநகர சபையில் வெற்றி பெற்ற 3 உறுப்பினர்களும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்குர் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

(ச - இ)

## ரணிலின் தலைமையில் கூட்டாட்சி தொடரும்


### ஐ.தே.கட்சி அறிவிப்பு

கொழும்பு, பெப்.16,

கூட்டு அரசாங்கத்தை தொடர்ந்து முன்னெடுப்பது என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்றக் குழு நேற்றுக் கூடி முடிவு செய்துள்ளது. தற்போதைய அரசியல்சூழ்நிலை தொடர்பில் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. இதன்போது கட்சியின் தலைமைத்துவத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த வேண்டியதில்லை என்றமுடிவுஎடுக்கப்பட்டது.

அத்துடன், கூட்டு அரசாங்கத்தை தொடர்ந்து முன்னெடுப்பது என்றும், அமைச்சர் பதவிகளிலும், மூலோபாயங்களிலும் சில மாற்றங்களை ஏற்படுத்துவதெனவும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கென கூட்டு அரசாங்கம் புதிய இலக்குகள், நோக்கங்களுடன் செயற்படும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் 06▶



## பதவியில் தொடருங்கள்! ரணிலிடம் சொன்னார் மகிந்த

கொழும்பு, பெப்.16,

பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை விலக வேண்டாம் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட மகிந்த ராஜபக்ச உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிடத்தக்க வாக்குகளைப் பெற்றுள்ளது என்றும் எனவே, பிரதமர் பதவியில் மாற்றம் செய்யத் தேவையில்லை என்றும் தெரி 06▶

# நாடாளுமன்றை 2020 வரை யாராலும் கலைக்க முடியாது

கொழும்பு, பெப்.16

தற்போதைய நாடாளுமன்றம் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியால் கூட கலைக்க முடியாது என அரசியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

"தற்போதைய அரசியலமைப்பு சட்டத்தின்படி பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டு முதலாவது அமர்வு நடத்தப்பட்டால் அது நாலரை ஆண்டுகள் வரை ஜனாதியால் கூட கலைக்க முடியாது.

மாறாக நாடாளுமன்றை கலைப்பதெனில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அதாவது 150 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை. தற்போதைய நிலையில் ஐ.தே.க வுக்கு 150 எம்.பிக்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 95 எம்.பிக்கள், தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு 16 எம்.பிக்கள், ஜே.வி.பிக்கு 06 எம்.பிக்கள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஈ.பி.டி.பிக்கு ஒரு எம்.பிக்களே உள்ளனர்.

எனவே நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான அறுதிப்பெரும்பான்மை எந்தவொரு கட்சிக்கும் இல்லை. ஆகவே எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் திகதிக்கு பின்னரே நாடாளுமன்றத்தை கலைக்க முடியும்.

எனவே இந்த அரசியலமைப்பு விதியை தெரிந்து கொண்டும் தமது தற்காலிக திருப்திக்காக மக்களை குழப்பும் செயற்பாட்டில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்" என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)




## 'வட்டுகோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை' வெளியீடு

வவுனியா, பெப்.16

இலங்கையின் மூத்த இடதுசாரியும், முழுநேர அரசியல்செயற்பாட்டாளருமான சி. கா. செந்திவேல் எழுதிய, 'வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை' என்ற அரசியல் விமர்சனப் பகுப்பாய்வு நூலின் அறிமுக நிகழ்வு வவுனியா நகர பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் மன்னார் வீதியில் அமைந்துள்ள வவுனியா மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 18.02.2018 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் இடம்பெறவுள்ளது.

என். பிரதீபனின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் வரவேற்பு உரையையோ. கஜானனும், ஆய்வு உரையை மருத்துவரும்சமூகச்செயற்பாட்டாளருமான செ. மதுரகனும், கருத்துரைகளை வவுனியா தேசிய கல்விக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பார்த்தீபன் மருத்துவரும் வவுனியா தமிழ் மாமன்ற செயலாளருமான வே. துவாரகன், புதிய சிந்தனைப் பெண்கள் அமைப்பினுடைய செயற்பாட்டாளர் திருமதி பி. பிரசாந்தினி ஆகியோர் ஆற்றவுள்ளனர். சி. கா. செந்திவேல் ஏற்புரையை நிகழ்த்துவார்.

கடந்த கால இன விடுதலைப் போரின் வரலாற்றை ஆய்வு செய்யும் இந்த நூலின் அறிமுக நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்புவிடுத்துள்ளனர். (அ)

## எரிபொருளில் கலப்படம்: உரிமையாண்மை ரத்து

கொழும்பு, பெப்.16

சட்டவிரோத எரிபொருள் கலப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் அல்லது மண்ணெண்ணெய் தொடர்பிலான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் எரிபொருள் நிலையங்களின் முகவர் உரிமையாண்மையை ரத்துச் செய்வதற்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு, அரசாங்கத் தகவல் திணைக்களத்தில், நேற்று இடம்பெற்றது. இதன்போதே, அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவித்த அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் அமைச்சர் கயந்த கருணாதிலக்க, மேற்கண்ட விடயம் குறித்து அறிவித்தார்.

"தற்போது ஏற்பட்டுள்ள மண்ணெண்ணெய் கலப்படப் பிரச்சினை தொடர்பில் கவனத்திற்கொண்டு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க ஆகியோரால் முன்வைக்கப்பட்ட மேற்படி யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

எரிபொருளின் தவறான பயன்பாட்டைத் தடுப்பதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த நிலையிலேயே, இந்த யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது" என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## சாரதியைத் தாக்கியதால் ஓட மறுத்த இ.போ.ச பஸ்

கொழும்பு, பெப்.16

ஹம்பாந்தோட்டை- பதகிரிய வீதிப் போக்குவரத்தில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபை பஸ் ஊழியர்கள் நேற்றுத் திடீரெனப் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தனர்.

ஹம்பாந்தோட்டை -பதகிரிய வீதியின் 336ஆம் இலக்க பஸ்ஸின் சாரதி ஒருவர் நேற்றுமுன்தினம் தனியார் பஸ் உரிமையாளர் ஒருவரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தத் திடீர்ப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அம்பாந்தோட்டப் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளது. (அ)

## போக்குவரத்து அபிவிருத்திக்கு அமெரிக்க நிறுவனம் உதவி

கொழும்பு, பெப்.16

அமெரிக்காவிலுள்ள மிலேனியம் ஷெல்லேஞ்ஜ் கோப்பரேஷன் என்றழைக்கப்படும் எம்.சி.சி நிறுவனத்திடமிருந்து, இலங்கைக்கு பல மில்லியன் அமெரிக்க டொ்லர் நிதி உதவி கிடைக்கப்பெறவுள்ளதாக, பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கைப் போக்குவரத்துத் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் காணி முகாமைத்துவப் பணிகளுக்காகவே, மேற்படி நிதியுதவி அளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடுகளின் தகுதி நிலைகள் குறித்து ஆராயப்பட்டே, மேற்படி நிறுவனத்தால் நிதி உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், கடந்த 2004ஆம் ஆண்டுத் தேர்வின் போது, இலங்கை முதலிடத்தைப் பெற்றிருந்த போதிலும், அப்போது நாடு எதிர்கொண்டிருந்த யுத்த நிலைமை காரணமாக, உதவி கிடைக்கப்பெறவில்லை.

இந்நிலையில், தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் கொள்கைகளைக் கருத்திற்கொண்டு, இலங்கைக்கான நிதியுதவியை வழங்க, மேற்படி எம்.சி.சி நிறுவனம் தீர்மானித்துள்ளதென பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிதியுதவியின் கீழ் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், இரு கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ளன. அந்த வகையில், நகரங்களில் காணப்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான வேலைத்திட்டம்முதற்கட்டமாகவும் வசதி குறைந்த பிரதேசங்களின் பிரதான வீதிகளை புதுப்பிக்கும் வேலைத் திட்டம், இரண்டாம் கட்டமாகவும் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(அ)

## முத்து சிவலிங்கம் பிரதியமைச்சரானார்

கொழும்பு, பெப்.16

சிறிய மற்றும் ஆரம்பக் கைத்தொழில் பிரதியமைச்சராக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான முத்துசிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்றுக் காலை வழங்கப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது. (அ)

## வசூல் வேட்டையில் யால் தேசிய பூங்கா

கொழும்பு, பெப்.16

யால தேசிய பூங்காவின் மூலம் கடந்த வருடத்தில் ஆகக்கூடிய வருமானம் பெறப்பட்டியிருப்பதாக நிலைபெறா அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

2017 ஆம் ஆண்டில் யால தேசிய பூங்காவின் மூலம் 700.58 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டது. இதே காலப்பகுதியில் இங்கு விஜயம் செய்துள்ள சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 397122 பேர் ஆகும்.

இவர்களுள் 207927 பேர் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளாவர். உடவளவ தேசிய பூங்காவின் மூலம் கடந்த வருடத்தில் 358.44 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டுள்ளது.

236867 சுற்றுலாப்பயணிகள் இங்கு விஜயம் செய்துள்ளனர். ஹோட்டன் தென்னை தேசிய பூங்காவின் மூலம் 361.09 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டுள்ளது. இங்கு சுற்றுலாப்பயணிகளாக 345480 பேர் விஜயம் செய்துள்ளனர். (அ)

## வேதாரணியேஸ்வராவில் விளையாட்டுப் போட்டி



வடமராட்சி, பெப்.16

கரணவாய் கிழக்கு வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தில் 2018 ஆண்டுக்கான இல்லமெய்வல்லுநர் போட்டி அதிபர் சி.சிவகணேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக ப.பாலகுமார் கலந்து கொண்டு, வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார். (அ-11)

எதிரொலி Ethiroli

வெள்ளி, 16 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

## கணக்கு சரிவருமா?

தலையிடிக்கு தலையணை மாற்றிய கதையாக, தற்போதைய அரசில் உள்ள சில அமைச்சர்களை மாற்றிவிட்டால் அரசு பலமாகி விடும் என்று முடிவெடுத்து அதற்கான காரியங்களும் முழுவீச்சில் முடுக்கி விடப்பட்டுள்ளன. இதனால் அமைச்சரவையில் மட்டுமே மாற்றம் வருமே தவிர அரசாங்கம் ஒருபோதும் மாறாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித, நம்பிக்கையோடு சொல்லியிருக்கிறார்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளோடு வீசத் தொடங்கிய அரசியல் சூறாவளியால், கூட்டாட்சி குலைந்து, புதிய அரசாங்கம் அமையும் என்று ஆருடம் கூறப்பட்டது. பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை விலகச் சொல்லி ஜனாதிபதி மைத்திரி உட்பட பல திசைகளில் இருந்தும் குரல்கள் எழத் தொடங்கின. அத்தோடு ஐ.தே.க, சுதந்திரக் கட்சி, பொது எதிரணி என்பன தத்தம் பக்கம் ஆட்சியமைக்க, பிற கட்சி உறுப்பினர்களோடு குதிரை பேரத்தில் இறங்கின. எனவே ஆட்சி மாற்றம் நிச்சயம் என ஒவ்வொரு நாள் விடியலிலும் செய்திகள் வந்து கொண்டிருந்தன.

ஆனால், அவ்வளவு தூரம் இந்த ஆட்சியை எவரும் அசைக்க முடியாது என்பதை திரைமறைவில் நடந்த சம்பவங்கள் உணர்த்தின. தேசிய அரசாங்கம் என்பது , மேற்குலகினதும், இந்தியாவினதும் விருப்பப்படி ஐ.தே.கவுக்கும் , சுதந்திரக் கட்சிக்கும் இடையே நடந்த ஒரு திருமணம். இந்தத் திருமணப் பந்தத்தில் இருந்து ஐ.தே.கவோ அல்லது சுதந்திரக்கட்சியோ அல்லது இவ்விரு கட்சிகளுமோ பிரிய விரும்பினாலும் பிரிய முடியாது. யார் இந்த அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்த நினைத்தார்களோ அவர்கள் நினைத்தால் மாத்திரமே தனித் தனிப் பாதையில் இனிமேல் சுதந்திரக் கட்சியென்றாலும் சரி, ஐ.தே.க என்றாலும் சரி செல்லமுடியும். இதனால் தான் இதோ ஆட்சி மாற்றம், அதோ பிரதமர் மாற்றம் என்று ஒவ்வொரு கட்சியும் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்க, மறுமுனையில் இலங்கையின் அரசியலை ஆட்டுவிக்கும் சூத்திரதாரிகளின் தூதரக அதிகாரிகள், ஜனாதிபதியோடும், பிரதமரோடும் இரவு, பகலாகப் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

இந்தப் பேச்சுக்களையடுத்தே தனித்து ஆட்சியமைக்கும் முடிவை ஐ.தே.கவும், பிரதமர் பதவியில் இருந்து ரணிலை விலக்கச் சொல்லும் கோரிக்கையை சுதந்திரக் கட்சியும் கைவிட்டன. இப்போது அரசாங்க மாற்றத்துக்குப் பதிலாக, அமைச்சரவை மாற்றம் மட்டும் செய்து விட்டால் போதும், குறண்டிக் கிடக்கும் அரசாங்கம், உசைன் போல்ட் போல மின்னல் வேகத்தில் ஓடத்தொடங்கிவிடும் என்கிற கணக்கில் கூட்டரசில் அங்கம் வகிப்பவர்களிடம் இருந்து அறிக்கைகள் வரத்தொடங்கியுள்ளன.

இந்த அமைச்சரவை மாற்றத்தில் கவிழப்போகும் முதல் தலை சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னா தான் என்று தகவல்கள் கசிகின்றன. இம்முறை மகிந்த தரப்பு இவ்வளவு சாதாரணமாக பெரும்பாலான சபைகளைக் கைப்பற்றுவதற்கு, அவர்கள் மீதான ஊழல், மோசடி, கொலை வழக்குகளை உரியவேளையில் நடத்தி முடிக்காமல் இழுத்துக் கொண்டே போவதும் ஒரு முக்கியமான காரணம். வழக்குகளை முடித்து மகிந்த தரப்புச் செய்த அத்தனை அட்டூழியங்களையும் நீதிமன்றத்தால் கேள்விக்குட்படுத்தி, தண்டனையை வாங்கிக் கொடுத்திருந்தால், இப்படி அவர்கள் அரசியல் சதுரங்கத்தை ஆடியிருக்க முடியாது. மகிந்த அணி மீது , அதிரடியாகக் கை வைத்தால் அது அவர்களுக்கு அனுதாப அலையை ஏற்படுத்தி, தமக்கு எதிரானவர்களாக நாட்டு மக்கள் திரும்பக் கூடும் என்று அரசு நினைத்திருந்தது. ஆனால் அப்படிக் கைவைக்காமல் இருந்தது கூட அரசுக்கு ஆப்பாக மாறிவிட்டது. எனவே சட்டம், ஒழுங்கு அமைச்சுக்கு, எதற்கும் அசராத, மகிந்த தரப்பை மூர்க்கத்தோடு அனுகக் கூடிய ஒருவரை அந்தப் பதவிக்கு அமர்த்துவதன் மூலம் தங்கள் பங்குக்கு ஒரு பகடையாட்டத்தை ஆட அரச தரப்பு நினைக்கிறது. அதனால் பெரும்பாலும் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவே அடுத்த சட்டம், ஒழுங்கு அமைச்சராக நியமனம் பெற அதிக வாய்ப்புகள் உண்டு.

பொன்சேகா ஏற்கனவே மகிந்தவிடம் அடிபட்ட புலி. பாய்வதற்கு தருணம் பார்த்துக் காத்திருக்கிறார். அவரிடம் மகிந்த தரப்பைக் கவனிக்கும் வேலையைக் கொடுத்து விட்டால், தன் பழைய கணக்கை அவர் தீர்த்துக் கொள்வதோடு, மகிந்த தரப்புக்கும் மரணபயத்தைக் காட்டலாம். இதனால் தங்களைக் காத்துக் கொள்ளத் திட்டங்கள் தீட்டுவதற்கே மகிந்த அணிக்கு நேரம் சரியாக இருக்கும். அரசியலில் இன்னும் இறங்கி அடிக்க புதிய வியூகங்களைப் போட அவர்களுக்கு காலம் இடம் கொடாது. அந்த இடைவெளிக்குள் தங்களின் இருப்பை கொஞ்சமாவது சரி செய்து கொள்ளலாம் என்பதே நல்லாட்சிக்காரர்களின் இப்போதைய கணக்கு. இந்தக் கணக்காவது சரியாகின்றதா என்பது சில மாதங்களில் தெரிந்துவிடும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# அரசை பாதுகாக்க இந்தியா, அமெரிக்கா முயற்சி

கொழும்பு, பெப்.16

மைத்திரிபால சிறிசேன- ரணில் விக்கிரமசிங்க அமைத்துள்ள கூட்டு அரசாங்கத்தைப் பாதுகாக்கின்ற முயற்சிகளில் இந்தியாவும், அமெரிக்காவும் ஈடுபட்டுள்ளதாக, சிறிலங்கா பொதுஜன முன்னணி குற்றம்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே கூட்டு எதிரணி மற்றும் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பேச்சாளரான டலஸ் அழகப்பெரும மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சேஷான் சேமசிங்க, சிசிர ஜெயக்கொடி தேனுக விதானகமகே ஆகியோர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

"2015இல் மகிந்த ராஜபக்சவை அகற்றும் திட்டத்தை முன்னெடுத்தவர்கள் இப்போது கூட்டு அரசாங்கத்தைக் காப்பாற்றுவதில் ஈடுபட்டுள்ளார்கள். உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் இடம்பெறும் வெளிநாட்டுத் தலையீடுகள் தீவிர கரிசனைக்குரியது. என்றும் அவர்கள் தெரிவித்தனர்."

கொழும்பு அரசியல் குழப்பங்கள் ஆரம்பித்த பின்னர், அமெரிக்க மற்றும் இந்தியத் தூதுவர்கள் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(அ)

## 12 குற்றப் பொறுப்பு வயது

கொழும்பு, பெப்.16,

இலங்கையில் குற்றவியல் சட்டத்தின் கீழ் பொறுப்புக் கூறுவதற்கான வயதெல்லையை 12 ஆக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நீதியமைச்சர் தலதா அத்துகோரள முன்வைத்த யோசனைகளுக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை சட்டத்தின் அடிப்படையில் இதுவரை காலமும் 8 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் மீது அவர்கள் புரியும் குற்றத்துக்கான பொறுப்புக்கள் சுமத்தப்படாதிருந்தது. எனினும் இது மிகக் குறைந்த வயது என்று உளமருத்துவர்கள் மற்றும் அதனுடன் தொடர்பான நிபுணர்கள் சுட்டிக் காட்டி இருந்ததால் ஆகக் குறைந்த வயதெல்லையை 12 ஆக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை 12 வயதுக்கு அதிகமான மற்றும்14 வயதுக்கும் குறைந்த சிறுவர்களுக்கு குறித்த குற்றம் தொடர்பிலான புத்திக் கூர்மை காணப்பட்டதா? என்பதை கணிப்பிடும் அதிகாரத்தை மாவட்ட நீதவான்களுக்கு வழங்கும் வகையில் இந்த சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளது.

1979ஆம் ஆண்டின்15ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தை திருத்தம் செய்வது தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக அது நாடாளுமன்றத்தில் சமரப்பிக்கப்பட உள்ளது. (இ)

## துப்பாக்கிச் சூட்டில் பெண்ணுக்கு காயம்

கொழும்பு, பெப்.16

முகத்துவாரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்து கொழும்பு- தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முகத்துவாரம்- லெல்லம வெல்ல பகுதியில் இடம்பெற்ற குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 47 வயதான பெண்ணொருவரே காயமடைந்துள்ளார்.

குறித்த பெண் சந்தைக்கு அருகில் நின்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே, மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அவர் மீது துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டு, அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## ராஜபக்ஷவின் மனைவி எலும்புக்கூடாக மீட்பு

நாவலப்பிட்டி, பெப்.16,

நான்கு பிள்ளைகளின் தாயை பாழடைந்த வீட்டில் இருந்து எலும்புக் கூடாக பொலிஸார் மீட்டுள்ளனர். இது மூன்று மாதங்களுக்கு முன் உயிரிழந்த 79 வயதான ராஜபக்ஷ முதியன்சலாகே குசுமாவதி என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

நோட்டன்பிரிட்ஜ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரிவன்எலிய விதுலிபுர பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த பெண்மணி தனது வீட்டில் தனிமையில் வசித்து வந்தார். முதியோர் கொடுப்பனவு பெற வராததையடுத்து உறவினர்கள் அந்த வீட்டுக்கு சென்று கதவை திறந்து பாரத்த போது அவர் கட்டிலிலேயே உயிரிழந்து கிடப்பதை கண்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இப்பெண் கொலை செய்யப்பட்டாரா அல்லது நோய்வாய்ப்பட்டு இறந்தாரா என்பது தொடர்பாக நோட்டன் பொலிஸாரும், ஹற்றன் கை ரேகை அடையாளப் பிரினரும் இணைந்து புலன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ)

## சலசலப்புகளுக்கு மத்தியில் மன்னார் நகர பிதா தெரிவு



மன்னார், பெப்.16,

பெரும் சலசலப்புக்கு மத்தியில் மன்னார் நகர சபைத் தலைவராக ஞானப்பிரகாசம் ஜெராட் தெரிவு செய்யப்பட்டுள்ளார். எனினும் ஏனைய சபைகளுக்கான தலைவர், உப தலைவர்கள் தெரிவு செய்யப் படவில்லை.

நேற்று மாலை மன்னாரின் பிரபல விடுதி ஒன்றில் நடைபெற்ற இக் கூட்டத்தில், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண அமைச்சர் எஸ். சிவநேசன், மாகாணசபை உறுப்பினர் எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவான உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கருத்துக்களை முன்வைத்த போதே கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. ஏனைய உறுப்பினர்கள் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டதுடன் சலசலப்பும் ஏற் பட்டது. (இ)

## 4 படையினர் காயம்

தியத்தலாவ, பெப்.16,

தியத்தலாவை இராணுவ முகாமின் மதில் இடிந்து வீழ்ந்ததில் 4 இராணுவத்தினர் காயமடைந்து தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில், சேர்க்கப்பட்டுள்ளனர்.

தியத்தலாவை இராணுவ முகாமின் சுற்றுலா விடுதிக்கு அருகில் இராணுவத்தினர் வடிகால் ஒன்றை அமைத்துக் கொண்டிருந்த போதே இந்தச்சம்பவம்இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டவர்களின் நிலை கவலைக் கிடமாக இல்லையென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

## இன்று நாளும் கோளும்


16.02.2018 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் மாசி மாதம் 04 ஆம் நாள்

பிரதமை காலை 04.24 மணி வரை | அவிட்டம் காலை 10.19 மணி வரை | சித்தயோகம்

இராகுகாலம் 10.30 - 12.00 | சுபநேரம் மு.ப. 09.30 - 10.30 | எமகண்டம் பி.ப. 03.00 - 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுகம் | தோல்வி | இலாபம் | ஆதரவு | ஆதாயம் | தெளிவு | வெற்றி | பகை | நலம் | போட்டி | ஊக்கம் | உழைப்பு |

# நோய்த் தடுப்புப் பரிசோதனை



வடமராட்சி, பெப்.16

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து வருகை தந்த மலேரியா தடுப்பு பிரிவினர் கரணவாய் செல்வாபுர கிராமத்தில் உள்ள மக்களுக்கு நோய்த் தடுப்பு பரிசோதனையை நேற்றுக்காலை மேற்கொண்டனர். இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து பயன்பெற்றனர். (அ-11)



# மகிந்த கேக் வெட்டி வெற்றிக் கொண்டாட்டம்

கொழும்பு, பெப்.16

உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கேக் வெட்டி கொண்டாடியுள்ளார்.

விஜேராம மாவத்தையிலுள்ள மகிந்த ராஜபக்சவின் இல்லத்தில் பொதுஜன பெரமுனவின் எம்.பிக்கள் சூழ இந்த வெற்றி கொண்டாட்டம் இடம்பெற்றுள்ளது.




இதன்போது, வெட்டப்பட்ட கேக்கின் மத்தியில் தாமரை மொட்டுச் சின்னம் பொறிக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தாதி மீது வன்புணர்வு: இராணுவக் கப்டன் கைது

கொழும்பு, பெப்.16

தாதி ஒருவரை கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியகுற்றச்சாட்டில் இராணுவத்தில் பணிபுரியும் கப்டன் தர அதிகாரி ஒருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துல்கிரிய அலவாவ பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான அமித்குமார (வயது-30 ) என்ற அதிகாரியே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

கைது செய்யப்பட்ட குறித்த இராணுவ அதிகாரி 2009 ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்தவரெனவும் மன்னார் தள்ளாடி இராணுவ முகாமில் பணியாற்றியவரெனவும் கஞ்சா போதைப் பொருளுக்கு அடிமையானவரெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.



இவரது அறையைச் சோதனை செய்த பொலிஸார்கஞ்சா, செயற்கையான பாலியல் சாதனங்கள், பாலியல் மாத்திரைகள் என்பவற்றைக் கைப்பற்றினர்.

குறித்த தாதி மீதான பாலியல் வன்புணர்வுச் சம்பவத்துடன் அவரது காதலரான 37 வயதுடைய இராணுவ மருத்துவர், லான்ஸ் கோப்ரலான இராணுவச் சாரதி மற்றும் பொறியியலாளர் ஒருவரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# அரசு ஒருபோதும் மாறாது அமைச்சரவையே மாறும்

கொழும்பு, பெப்.16

"ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து முன்னெடுக்கும் கூட்டு அரசு தொடர்ச்சியாக ஆட்சியிலிருக்கும். அமைச்சரவை மட்டுமே விரைவில் மாற்றப்படும்" என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்னதெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில்நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் மாநாட்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைச்சரவை இணைப்பேச்சாளர் தயாசிறி ஜெயசேகர நேற்றுப் பங்கேற்கவில்லை. வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை நண்பகல் ஆரம்பமானது. மாநாட்டில் ஐக்கிய தேசிய முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரவை இணைப் பேச்சாளர்கள் ராஜித சேனாரத்ன, கஜந்த கருணாதிலக ஆகியோர் மட்டும் பங்கேற்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)



# வெற்றியைச் சரியாகக் கணித்த பஸில்

மகிந்தவின் சகோதரர்கள்தான் அவரது ஆட்சிக்குப் பலம் சேர்த்தவர்கள். கோத்தபாய யுத்தத்தை வென்று கொடுத்தார்.பஸில் அரசியலை வென்றுகொடுத்தார். சிறந்த ஒருங்கிணைப்பாளர் என்ற பெயரை எடுத்தவர் பஸில். ஆனால், 2015 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த தோற்றதும் பஸிலின் திறமை கேள்விக்குட்படுத்தப்பட்டது. தோல்விக்கான பொறுப்பையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

இனிவருகின்ற தேர்தல்களில் எப்படியாவது மகிந்தவுக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்து இழந்த பெயரை மீளப் பெற வேண்டும் என்று உறுதி பூண்டார். அவருக்குக் கைகொடுத்தது உள்ளூராட்சி சபைத் தேர்தல். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மகிந்த அணி புதிய கட்சி ஒன்றின் ஊடாகவே களமிறங்க வேண்டும் என்ற யோசனையை மகிந்தவிடம் முன்வைத்து, மகிந்த தரப்பும் மைத்திரி தரப்பும் ஒன்று சேராமல் பார்த்துக்கொண்டார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பே பஸில் தேர்தலுக்கான ஏற்பாடுகளை செய்யத் தொடங்கினார். இந்த அரசின் செல்வாக்கை சரித்து மகிந்தவின் செல்வாக்கை எல்லா கிராமங்களிலும் அதிகரிக்கும் வியூகங்களை வகுத்தார்.

ஒரு கட்டத்துக்கு அப்பால் மகிந்தவின் கட்சி வெற்றி பெறும் என்பதை ஊகித்துக்கொண்டார். தேர்தல் அறிவிக்கப்பட்டு பிரசாரப் பணிகள் மும்முரமாக இடம்பெறத் தொடங்கின. வெற்றி நிச்சயம் என்பதை ஊகித்துக்கொண்ட பஸில் எத்தனை சபைகளை மகிந்தவால் கைப்பற்ற முடியும் என்பதை அறிந்துகொண்டார்.

நாங்கள் அனைத்து சபைகளையும் கைப்பற்றுவோம் என்று ஏனைய கட்சிகள் எதுவித ஆய்வுகளும் இன்றி முழங்கித் திரிந்த அதேவேளை,பஸில் மாத்திரம் சரியாகச் சொன்னார்.

பிரசாரப் பணிகள் நிறைவடைவதற்கு முதல் நாள் ஆறாம் திகதி ஊடகங்களை சந்தித்த பஸில் மஹிந்த அணி 220 முதல் 250 வரையான சபைகளை கைப்பற்றும் என்றார்.




மகிந்தவின் கட்சி கைப்பற்றி இருப்பதோ 239 சபைகளை. மகிந்தவின் கட்சியின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட சபைகளுக்கு போட்டியிட்ட சுயேச்சைக் குழுக்களுக்கு மகிந்த கட்சி ஆதரவு வழங்கி அந்த சுயேச்சைக் குழுக்களே வெற்றி பெற்றுள்ளன. இது தவிர சில சபைகளில் மகிந்தவின் கட்சி ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைக்கும். இந்த இரண்டு நிலைமையையும் சேர்த்தல் மகிந்தவின் கட்சிக்கு கிட்டத்தட்ட 250 சபைகள் கிடைக்கும். பஸிலின் இந்த அரசியல் திறமையைப் பார்த்து மூக்கின்மேல் விரல் வைக்கின்றனர் அரசியல் அவதானிகள்.

எப்படி உங்களால் சரியாகக் கணிப்பிட முடிந்தது என்று அவரிடம் கேட்டால் அதை மட்டும் சொல்லமாட்டேன் என்கிறார்.

# பயனாளிகளுக்கு நேர்முகத் தேர்வு





வடமராட்சி, பெப்.16

கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவின் ஏற்பாட்டில், தியாகி அறக்கொடை நிதியம் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு உதவி செய்யும் நோக்கில், பயனாளிகளைத் தெரிவு செய்வதற்காக நடத்திய நேர்முகத் தேர்வு நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பிரதேச செயலர் சிறிமோகனனும் உதவி பிரதேச செயலர் ரஜீவ் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் சிறிவரதபாஸ்கரனும் தியாகி அறக்கொடைப் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். (அ-11)

# சுயநலத்தை விட்டு ஒன்றுபட வேண்டும்



## மாகாணசபை உறுப்பினர் அறைகூவல்

வவுனியா, பெப்.

தமிழ் மக்களுடைய நலன்கருதி தமிழ் தலைமைகள் சுயநலத்தை கைவிட்டு ஒன்றிணைய வேண்டும் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் ப.தியாகராசா தெரிவித்துள்ளார்.

வவுனியா, வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள அவரது காரியால யத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

"உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட்டு பல நாட்களாகியும் தமிழ்த் தலைமைகள் சபைகளை அமைத்து ஆட்சி நடத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். தமிழ் தலை மைகள் மீதான வெறுப்பே தமிழ் மக் கள் இதுவரைகாலமும் இல்லாத அள வுக்கு தேசியக் கட்சிகளுக்கு வாக்க ளித்துள்ளமைக்கு காரணம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனியாகத் தேர்தலில் நின்றபடியால் அவர்களுக்குத் தமிழ் மக்கள் வாக்க ளித்துள்ளனர். இல்லாவிட்டால் அந்த வாக்குகள் கூட தேசியக்கட்சிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும். தமிழ்த் தலை மைகள் எங்களுடைய கதவு திறந்திருக் கிறது என சொல்கிறார்கள் ஆனால் அவர்கள் ஒன்றாகச் செயற்படுவதற்கு முன் வருகிறார்களில்லை. தமிழ்க் கட்சிகள் ஒன்றிணையாவிட்டால் எதிர்காலத்தில் பெரும் பாதிப்பை நாம் சந்திக்க வேண்டியிருக்கும்.

தமிழ் மக்கள் என்ன காரணத்துக் காக வாக்களித்தார்கள் என்பதை தமிழ் தலைமைகள் உணராமல் மௌனம் காப்பது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகவே பார்க்கிறேன். தமிழ்த் தலைமைகள் ஒன்றிணையாவிட்டால் தேசிய கட்சிகள் ஆட்சி அமைக்கும் நிலைமையே காணப்படுகின்றது. மன் னார், முல்லைத்தீவு போன்ற பகுதி களில் தேசியக் கட்சிகள் நிபந்தனை யற்ற ஆதரவு வழங்கி ஆட்சியை கைப்பற்ற முனைப்புக்காட்டும் இவ் வேளையில் தமிழ் தலைமைகள் ஒன்றுபட்டு பிரதேச சபைகளை கைப் பற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மகிந்த ராஜபக்சவைப்பற்றி பேசிக் கொண்டிருக்காமல் தமிழ் தலை மைகள் ஐக்கியபட்டு செயற்பட முன் வரவேண்டும். கட்சிகுள் தங்கள் தலை மைகளை காப்பாற்றுவதற்காக தமிழ் மக்களுக்கு துரோகம் செய்ய வேண் டாம். தமிழ் மக்களுடைய அபிலா சைகளையும் தேசியத்தையும் வென் றெடுப்பதற்கு ஒன்றுபடவேண்டும்" என அவர் தெரிவித்தார். (அ)



## படுபாதாளத்தில் ரூபாவின் பெறுமதி

கொழும்பு, பெப்.16

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களால்; அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் மதிப்பு நேற்றும் கடும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

நேற்று அமெரிக்க டொலர் ஒன்றுக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு 60 சதத்தினால் குறைந்து, 156.74 ரூபாவாக வீழ்ச்சியடைந்தது.

உள்ளூராட்சித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன முன்னணி வெற்றிபெற்றதை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் குழப் பங்களாலேயே பொருளாதார உறுதியற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திக தியுடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி, அமெரிக்க டொலருக்கு எதிராக, இலங்கை ரூபாவின் மதிப்பு 4.29 ரூபாவினால், சரிந்துள்ளது. இது 2.81 வீத வீழ்ச்சியாகும்.

2017 பெப்ரவரி 14ஆம்திகதி அமெ ரிக்க டொலர் ஒன்றின் மதிப்பு, 152.45 ரூபா வாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)

## மகிந்தவின் வெற்றியால் தலைகீழாக ஆடாதீர்!

### ஞானசார தேரர் அறிவுரை



கொழும்பு, பெப்.16

"தேசப்பற்றாளர்கள், பௌத்த பிக் குகள் போன்றோரின் நோக்குகளும், நிலைப்பாடுகளுமே உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் வெற்றிக்கு கார ணம். எனவே இது குறித்து எவரும் தலைகீழாக ஆடத் தேவையில்லை" என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"இந்த வெற்றிக்கு ஒருவர், இரு வர் காரணமல்ல. முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ச நாட்டுக்குள் பெற்றுக்கொண்டுள்ள சமூக மூலத னம் என்பது மிகப் பெரியது. இதனை யாரும் மறுக்க முடியாது. மகிந்த ராஜபக்ச தலைமையில் தேர்தலில் பங்கேற்றதால், மக்கள் ஜனவரி 8 ஆம் திகதி செய்த தவறை திருத்திக் கொண் டுள்ளனர்.

இந்த வெற்றியால், எவரும் தலைகீழாக ஆட வேண்டியதில்லை.

ஜே.எல். பீரிஸ் போன்றவர்களின் கடந்த கால அரசியல் என்ன என்பது எங்களுக்கு தெரியும். தீர்வுப் பொதி, சமஷ்டி அரசியலமைப்பு ஆகியன கொண்டு வரப்படும்போது எங்கிருந்தார் என்பது எங்களுக்கு தெரியும். அவை பற்றி நாங்கள் கவலையடைவில்லை. கடந்த காலம், கடந்தகாலம் தான்.

நாடு மிகவும் பயங்கரமான நிலை யில் இருக்கின்றது. தேர்தலுக்கு பின்னர் நாடு ஏலத்துக்கு விடும் பொருள் போல் மாறியுள்ளது. அரசாங்கத்தை அமைக்க கடும் போட்டி ஏற்பட்டுள் ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் விலை நிர்ணயிக் கும் நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன. நாட்டில் என்றுமில்லாத வகையில் குழப்பமான அரசியல் சூழ்நிலை ஏற் பட்டுள்ளதால், பௌத்த பிக்குகள் என்ற முறையில் நாங்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டிய தருணம். இவ்வாறான சூழலில், எம்மை கலாசார ரீதியாக அழிக்கும் வெளி நாட்டு சக்திகளும், அமெரிக்கா மற்றும் இந்திய தூதுவர்களே அரசாங்கத்தை எப்படி முன்னெடுக்க வேண்டும் என்று ஆலோசனை கூறி வருகின்றனர். நாங் கள் அறியாமலேயே இலங்கை கால னித்துவ நாடாக மாறியுள்ளது" என் றும் அவர் தெரிவித்துள்ளார்.(அ)

## பொறுத்தனாங்கள், இன்னுங் கொஞ்சம் பொறுப்பம்

வோட்டுப் போட்ட அண்டு இடக்கை சின்னி விர லிலை அந்த ஆள் வைச்சுத் தேச்ச பேனைக்கலர் இன் னும் மாறேல்லை. மண்ணெண்ணை போட்டுக் கழு வியும் கறை போகேல்லை. அதுக்குள்ளை அரசிய லிலை எத்தினை குளறுபடியாக்கிடக்கு. "ஏறு எண்டு சொன்னால் எருதுவுக்குக் கோபம். இறங்கெண்டு சொன்னால் முடவனுக்குக் கோபம்" எண்ட மாதிரிக் கிடக்கு. இறங்கெடா... ஏறடா,,, கதையாக் கிடக்கு. ரணிலின்ரை குறிப்பை ஒருக்கா ஆரிட்டையம் காட்ட வேணும். ஆனால் மகிந்தாவைத் தோக்கப் பண்ணின சாத்திரியிட்டைக் காட்டக் குடாது.

இப்ப கொஞ்ச நாளாப் பேப்பரைப் பாக்கத் தலை யிடிக்கிது. இப்ப இருக்கிற அரசாங்கத்தைப் பாதுகாக் கப் பல பேர் அங்காலையும், இஞ்சாலையும் ஓடித்திரி யினமாம். அதுக்குள்ளை ரணிலை, இறங்கு சீற்றை விட்டெண்டு மகிந்தாவும், பெடியளும் கத்தினபடி. இதுக்கை அவரைப் பிரதமராக்குவம், இவரைப் பிரத மராக்குவம் எண்டு கட்சிக்கை அடிபிடி துவங்கிவிட்டுது. இதுக்கை நிமல் சிறிபால டி சில்வாவைப் பிரத மராக்கினால் என்ன எண்டும் ஆரோ கேட்டவையாம். அவர் ஒரு சீனியர் மெம்பர் எண்டதாலைதான் அப் பிடிக்கேட்டிருக்கினம். அவர் பிரதமரா வந்தால் பிர தமற்றை மேசைக்குக் கதிரை தேவை இல்லை. கட் டில் ஒண்டு காணும்.. நித்திரை கொள்ள. ஏனெண்டால் அவர் எந்தக் கூட்டத்திலை முழிச்சிருந்தவர்?

கூட்டமைப்பின்ரை கேள்விக்குக் கஜேந்திரகுமார் பதிலடி எண்டும் யாழ். மாநகர சபையிலை ஆட்சி அமைக்கக் கூட்டமைப்புக்கு நேசக்கரம் நீட்டும் விஜயகலா எண்டும் பல செய்தியள் கிடக்கு. சிலதைப் பாக்கக் கனவாயும், சிலதைப்பாக்கக் கிண்டலடிக் கிறமாதிரியும் கிடக்கு எண்டு முதலி சொன்னவன்.

அதோடை அவன் சொல்லுறான் சில வேளை ரணி லோடை சம்பந்தர் சேந்திடுவர் போலை கிடக்கெண்டு. சம்பந்தருக்கு உள்ளுக்கை ஒரு விருப்பம் இருந்தாலும் துணியமாட்டார். ஏனெண்டால் இப்பவே உள்ளூராட்சி எலக்சனிலையே படாதபாடுபட்டுப் போயிருக்கிறார். திருப்பியும் சனத்திட்டைத் திட்டு வாங்க அவருக்குத் திராணி இருக்காது எண்டு நான் நினைக்கிறன். ஏற் கனவே தோத்துப் போய் நிக்கிற ரணிலிட்டைப் போய் சேந்தால் அவருக்கு இருக்கிற மரியாதையும் போவிடு மெல்லே? ஆனால் ரணிலுக்குச் சம்பந்தரோடை சேர விருப்பமாம்.

உதைச் சொல்லேலாது எண்டு முதலி சொல்லுறான் ஏனெண்டால் – "தனித்து அரசாங்கத்தை அமைப் பதற்கான கூட்டணி அமைப்பது தொடர்பில் யாரும் எம்மை அணுகவில்லை. அவ்வாறு யாரும் அணுகி னால் அது பற்றி ஆலோசித்து முடிவெடுக்கப்படும்." எண்டு சாதுவா விருப்பபடுகிறமாதிரிச் சம்பந்தர் சொல்லி இருக்கிறார். போகமாட்டம் எண்டு அறுத்து உறுத்து மனுசன் சொல்லேல்லையே.. யோசிப்பம், பாப்பம் எண்டு தானே சொல்லுறார். அப்ப உவைக்குப் பின்னாலை ஆரோ போ, போகதை எண்டு சொல்ல இருக்கினம் போலை கிடக்கு. அதாலைதான் அவை யின்ரை சிக்னலுக்குப் பாத்துக் கொண்டிருக்கிற மாதி ரிச் சொல்லி இருக்கிறார்.

அதோடை மனுசன் விடேல்லை. பிறகும் பல்டி அடிக்கிறமாதிரி "உள்ளூராட்சித் தேர்தலில் தற்போ தைய அரசாங்கத்துக்கு எதிரான தெளிவான செய்தி ஒன்றை மக்கள் வழங்கியுள்ளனர். மக்களின் அந்த ஆணையை நாங்கள் மதிக்க வேண்டும்" – எண்டும் சொல்லி இருக்கிறார். அப்ப அப்பிடியும் சொல்லுறார் இப்ப இப்பிடியும் சொல்லுறார். உந்த ஆள் என்ன சொல்லுறார் எண்டதைக் கணக்கெடுக்கேலாமை இருக்கு.

ஆனால் நாங்கள் தான் கொஞ்சம் பொறுமை காக்க வேணும் எண்டு ஆரோ பேப்பர் கடையடியிலை சொன்ன மாதிரிக் கிடக்கு. இவ்வளவு காலமாகப் பொறுத்தனாங்கள் இன்னும் கொஞ்சம் பொறுப்பம்.

- வில்லங்கம் விநாசி

## சுயேச்சை உறுப்பினர்களுக்கு பாராட்டு







யாழ்ப்பாணம்,பெப்.16

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வலி. கிழக்கில் வாளிச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற, கா. கதிர்காமநாதன் தலைமையிலான சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்களுக்கான பாராட்டு விழா, கலைமதி கிராம மக்களின் ஏற்பாட்டில் புத்தூரில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்றது. (அ)

# பங்களாதேஷை அடித்து துவைத்த இலங்கை அணி

டாக்கா, பெப்.16

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது ரி-20 ஆட்டத்தில், இமாலய இலக்கை வெறும் 16.4 ஓவர்களில் வெளுத்து வாங்கி வென்றது இலங்கை அணி.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் துடுப்பாட்ட வீரர்கள் அதிரடியாக ஆட ஓட்ட எண்ணிக்கை சடுதியாக உயர்ந்தது. 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட் இழப்புக்கு பங்களாதேஷ் அணி, 193 ஓட்டங்களை எடுத்தது.

அதிகபட்சமாக முஷ்பிகுர் ரஹிம் ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களையும், சர்க்கர் 51 ஓட்டங்களையும், முகமதுல்லா 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜீவன் மெண்டிஸ் இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

இமாலய இலக்கை துரத்தக் களமிறங்கிய இலங்கை அணியின் குசல் மெண்டிஸ்-குணத்திலக ஜோடி அபார துடுப்பாட்டத்தைக் காட்டி பலமான அடித்தளத்தை இட்டது. 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குசல் மெண்டிஸ். 4 ஓட்டங்களுடன் தரங்க வெளியேறினார். டிக்வெல்ல 11 ஓட்டங்களும், குணத்திலக 30 ஓட்டங்களும் எடுத்தனர். அதன் பின்னர் இணைந்த திரச பெரேரா- சானக ஜோடி பங்களாதேஷ் பந்து வீச்சை சின்னாபின்னமாக்கி, 16.4 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களால் இலங்கை அணி வெற்றியீட்டியது .(அ)



## இன்றைய கேலிச்சித்திரம்




# மத்தியஸ்தருக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், பெப். 16

உதைபந்தாட்ட மத்தியஸ்தர் மீது நேற்றுமுன்தினம் இரவு வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இளவாலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், எஸ்.ஜெயக்குமார் என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இளவாலை விளான் சந்தியூடாக, மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த அவரைப் பின் தொடர்ந்து வந்த குழுவினரே வாளால் வெட்டியுள்ளனர்.

உதைபந்தாட்டப் போட்டியில் ஏற்பட்ட முரண்பாடே மத்தியஸ்தர் தாக்கப்படக் காரணம் எனக் கூறப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## தொடர்ச்சிகள்

### இன்னும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகிந்த ஆதரவு அணியினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேசினர் எனத் தெரியவருகின்றது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 42 நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிணைந்த எதிரணியின் 56 உறுப்பினர்கள், ஐ.தே.க மற்றும் அதன் தோழமைக் கட்சிகளின் 26 உறுப்பினர்களின் துணைகொண்டு இந்த அரசாங்கம் அமைக்கப்படுமெனத் தெரிய வருகிறது. புதிய அரசாங்கத்தின் பிரதமராக 4 பேரின் பெயர்கள் ஏற்கெனவே முன்மொழியப்பட்டன எனக் சொல்லப்படுகின்றது.

முன்னதாக, திங்கட்கிழமை இரவு, ஜனாதிபதியைச் சந்தித்த சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துமாறு கோரியிருந்தது. பிரதமர் மாற்றப்படாவிட்டால், நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கப் போகின்றனர் எனக் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதன் தொடர்ச்சியாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் பலர் இணைந்து, நேற்றுமுன்தினம் இரவு, ஜனாதிபதியைச் சந்தித்திருந்தனர். அதன்போது, இரு கட்சிகளும் இணைந்து, இப்பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காக, செயற்குழு ஒன்றை உருவாக்குவது என முடிவெடுக்கப்பட்டது. ஆனால் மத்தியில், புதிய அரசாங்கத்துக்கான ஆதரவைப் பெற, ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகள், ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டன என்று தெரிவிக்கப் பட்டது. (இ)

### 15 ஐ.தே.கவினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார் பிரதி அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம.

காலியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சியமைக்க முடியாது. அக்கட்சியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்முடன் இணையவுள்ளனர். எமக்கு முட்டுக்கொடுக்க ஆட்கள் இருக்கின்றனர். இதனால், நாங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்கத்தை அமைப்போம்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி வாருங்கள், நாம் இணைக்கத் தயார் என்று முன்னாள் ஜனாதிபதி எங்களுக்கு கூறினார். மக்கள் சக்தி கூட்டு எதிர்க்கட்சியிடம் உள்ளது. நாங்கள் இரண்டு தரப்பும் இணைவது ஆச்சரியமான விடயமல்ல. நாங்கள் ஒரே அணி. இரண்டரை வருடங்கள் பிரிந்து இருந்தோம். அடுத்த இரண்டரை வருடங்களுக்கு பணம், சிறப்புரிமைகளை எதிர்பாராது, இரண்டு தரப்பும் இணைந்து செயற்பட இணக்கம் வெளியிடப்பட்டுள்ளன.

நாங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்கத்தை அமைப்போம். எம்முடன் இணையவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை இப்போது வெளியிட மாட்டேன் - என்றும் நிஷாந்த மேலும் சொன்னார். (இ)

### கூட்டமைப்பையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியமைக்க முடியாத நிலை நீடிக்கும் நிலையில் முதலமைச்சரின் நிலைப்பாடு தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், 'கொள்கை ரீதியாக நாங்கள் அனைவரும் சேர்ந்து செயற்பட வேண்டும் என்பதை நான் ஏற்கனவே பலமுறை வலியுத்தி உள்ளேன். இப்போது நடைமுறையில் அது முக்கியமானதாக பரிணமித்துள்ளது. தேசியத்தோடு சம்பந்தப்பட்ட சகல தமிழ்க் கட்சிகளும் எழுத்து மூலமாகத் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் அல்லது கொள்கை ரீதியான ஆவணங்களில் கூறுவது எல்லாமே ஒன்றுதான்.

முக்கியமான வித்தியாசங்கள் எதுவுமே இல்லை. ஆனால் தனிப்பட்ட ரீதியாக அல்லது கட்சி ரீதியாக அல்லது அரசியல் ரீதியாக போட்டி போடும்போதே வித்தியாசங்கள் வருகின்றன. இந்த நிலையில் உள்ளூராட்சி மன்றங்களில் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி என்னால் எதுவும் கூற முடியாது. ஏனெனில் ஒவ்வொருத்தரும் என்ன அடிப்படையில் தீர்மானத்திற்கு வரப்போகிறார்கள் என்பதில்தான் அது தங்கியுள்ளது.

வெறுமனே கட்சியை எப்படியாவது கொண்டு நடத்த வேண்டும். யாரின் காலில் விழுந்தேனும், நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இருப்பவர்கள் கட்சி பற்றிக் கவனிக்க மாட்டார்கள் கொள்கையைக் கவனிக்க மாட்டார்கள் யாருடனும் சேருவார்கள். ஆனால் அது காலா காலத்தில் ஒரு பிரச்சினையை ஏற்படுத்துமென்பது திண்ணம். இப்பொழுது நல்லாட்சி அரசிற்கும் அது தான் நடந்திருக்கின்றது.

கொள்கை ரீதியாக கட்சிகள் சேர முடியுமென்றால் அவர்கள் அந்தக் கொள்கைக்கு முதலிடம் கொடுத்து சின்னக் கட்சிகளோ அல்லது பெரிய கட்சிகளோ தேசியம் சார்ந்த கட்சிகள் ஒன்றிணைந்து எமது மக்களுக்கு சேவையாற்ற முன்வர வேண்டும்." - என்றார். (ச)

### கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்பாக விஷப் போத்தல்களுடன் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் கோரி நேற்றுமுன்தினம் காலை தொடக்கம் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்குப் பதில் கிடைக்காத நிலையில் நேற்று விஷப் போத்தல்களுடன் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

182 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க மத்திய அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. ஆனால் வட மாகாண முதலமைச்சர் அனுப்பிய கடிதத்தால் நியமனம் தடைப்பட்டுள்ளது எனத் தெரிவித்தே, வட மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலமான தொண்டராசிரியர்கள போராட்டத்தில் குதித்துள்ளனர். (ச)

### பதவியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார் என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார்.

கொழும்பில் நேற்று நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின் போதே அமைச்சர் ராஜித சேனாரட்ன இந்த தகவலைத் தெரிவித்தார். (இ)

### கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பாகவே யாழ். மாநகர மேயர் வேட்பாளராக இ.ஆர்னோல்ட் அறிவிக்கப்பட்டு விட்டார்.

தேர்தல் முடிவுகளின் பின்னரும் இதனை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அறிவித்தார். இடையில் யாழ். மாநகர மேயர் யார் எனக் கேள்வி எழுந்தது. அப்பதவி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ சிறிலுக்கு வழங்கப்பட வேண்டும் என சில உறுப்பினர்கள் கட்சித் தலைமைக்கு கடிதம் அனுப்பினர். இருந்தும் ஆர்னோல்ட்டே மேயர் என கூட்டமைப்பு அறிவித்தது.

இது தொடர்பாக சிறிலிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது கட்சியின் முடிவே இறுதி முடிவு. அதற்கு நான் கட்டுப்படுகிறேன் எனப் பதிலளித்தார். (ச)

### ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவுடன் இணைந்து மாற்றங்களை நடைமுறைப்படுத்தவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இத்தகவல்களைக் கட்சியின் பொதுச்செயலாளர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, தமது அமைச்சர் பதவியை விட்டு வில்க இந்தக் கூட்டத்தில் விருப்பம் வெளியிட்டுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

# பதவி விலகினார்

## தென்னாபிரிக்க ஜனாதிபதி



கேப்டவுண், பெப்.16

தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் ஸூமா, தனது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். பதவி விலக வேண்டுமென, அவரது கட்சியிடமிருந்து கிடைக்கப்பெற்ற அழுத்தத்துக்கு அடிபணிந்தே, அவர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

அவரது கட்சியான ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ், பதவி விலக வேண்டுமென்பதற்கான பணிப்புரையை, ஏற்கனவே விடுத்திருந்தது. ஆரம்பத்தில் அதை ஏற்று நடக்க மறுத்த அவர், தற்போது பதவி விலகியுள்ளார்.

9 ஆண்டுகளாக ஜனாதிபதியாகப் பதவி வகித்த அவர், அடுத்த ஆண்டு நடுப்பகுதியிலேயே பதவியிலிருந்து விலக வேண்டியிருந்தது. எனினும், ஊழல் குற்றச்சாட்டுகள் காரணமாக, பொதுமக்களின் ஆதரவை இவர் இழந்திருந்தார்.(அ)

# 300 தீவிரவாதிகள் ஊடுருவத் தயார்

புதுடெல்லி, பெப்.16

பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவ 300 தீவிரவாதிகள் தயாராக இருப்பதாகவும், அவர்களை முறியடிக்கத் தயாராக இருப்பதாகவும்இராணுவம்தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் இருந்து சமீபத்தில் காஷ்மீருக்குள் ஊடுருவிய தீவிரவாதிகள் இராணுவ முகாமில் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதில் இராணுவ வீரர்கள் பலர் உயிரிழந்தனர். இந்த நிலையில் பாகிஸ்தானில் இருந்து மேலும் பல தீவிரவாதிகள் ஊடுருவத் தயாராக இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து இந்திய இராணுவத்தின் வடக்கு பிரிவு தளபதி தேவராஜ் அன்பு கூறியதாவது:

"காஷ்மீரில் தீவிரவாதச் செயல்களை அரங்கேற்ற பாகிஸ்தான் தொடர்ந்து முயன்று வருகிறது. எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டை தாண்டி தீவிரவாதிகளை ஊடுருவச் செய்து வருகிறது. பாகிஸ்தானில் இருந்து 300 தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவத் தயாராக இருப்பதாகத் தகவல் தெரிய வந்துள்ளது.

இதைத் தடுத்து நிறுத்த இராணுவம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதுமட்டுமின்றி சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, பாகிஸ்தான் இராணுவம் இந்தியப் பகுதிக்குள் துப்பாக்கிச்சூடு நடத்தி வருகிறது. நமது இராணுவமும் பதிலடி கொடுத்து வருகிறது. இந்திய இராணுவத்தின் பதிலடி தாக்குதலில் 192 பாகிஸ்தான் வீரர்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர்" எனக் கூறினார்.(அ)

# சிரியாவைத் தாக்குவோம்

பரிஸ், பெப்.16

"மக்கள் மீது இரசாயன ஆயுதத் தாக்குதல் நடத்தியது நிருபிக்கப்பட்டால் சிரிய அரசு மீது தாக்குதல் நடத்துவோம்" என்று பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஜனவரி முதல் தற்போது வரை சிரியாவில் 6 குளோரின் ஆயுதங்களை கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் 12 பேர் காயமடைந்துள்ளனர். ஆனால் இதை சிரிய அரசு கடந்த ஜனவரி மாதம் மறைத்தது.

இந்தநிலையில் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன்,

"சிரியா அரசு தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களைக் கொண்டு பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது. பொதுமக்கள் மீது சிரிய அரசு இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியிருப்பது நிரூபிக்கப்பட்டால் அந்த நாட்டின் மீது பிரான்ஸ் தாக்குதல் நடத்தும்.

அதே நேரத்தில் தீவிரவாதிகள் மற்றும் ஜிகாதிகளுக்கு எதிராகப் போரிட பிரான்ஸ் முன்னுரிமை அளித்து வருகிறது" எனவும் கூறியுள்ளார். (அ)

# நெத்தன்யாகுவுக்கு நெருக்கடி



இஸ்ரேல், பெப்.16


இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு மீது ஊழல் வழக்குப் பதிவு செய்யலாம் என்று பரிந்துரை செய்துள்ள அந்நாட்டுப் பொலிஸார், அதற்கான ஆதாரம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1996-99 வரை பிரதமர் பதவி வகித்த பெஞ்சமின் நெத்தன்யாகு, அதன்பிறகு 2009 முதல் தொடர்ந்து பிரதமராக இருந்து வருகிறார். இதுவரை மொத்தம் 12 ஆண்டுகள் இந்தப்பதவியில் இருந்துள்ளார். இவர் மீது அந்நாட்டு பொலிஸார் 2 வழக்குகளைப் பதிவு செய்து கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனவரி முதல் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த வழக்குகளை விசாரித்து வந்த பொலிஸார் நேற்று முன்தினம் சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ள பரிந்துரை அறிக்கையில், "நெத்தன்யாகு மீதான 2 வழக்குகள் பற்றி விசாரணை நடத்தப்பட்டது. இதில் இலஞ்சம் வாங்கியது, மோசடியில் ஈடுபட்டது, நம்பிக்கை துரோகம் செய்தது ஆகிய அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு போதுமான ஆதாரம் இருப்பது தெரியவந்துள்ளது. எனவே அவர் மீது ஊழல் வழக்குப் பதிவு செய்யலாம்" எனக் கூறப்பட்டுள்ளது. இதையடுத்து நெத்தன்யாகு உடனடியாக பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் கோரியுள்ளனர். (அ)

# அமெரிக்காவில் சூடு: 17 மாணவர்கள் சாவு





புளோரிடா, பெப்.16

ஐக்கிய அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள பாடசாலையொன்றில், இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், 17 பேர் கொல்லப்பட்டதோடு, மேலும் பலர் காயமடைந்தனர்.

பார்க்லான்ட் என்ற இடத்தைச் சேர்ந்த, மார்ஜொரி ஸ்டோன்மான் டக்ளஸ் உயர் பாடசாலையில் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு, துப்பாக்கி ஒன்று பயன்படுத்தப்பட்டது.

குறித்த பாடசாலையின் முன்னாள் மாணவர் ஒருவரே, இந்தச்சூட்டுச் சம்பவத்தை மேற்கொண்டார் என அடையாளங்காணப்பட்டுள்ளதுடன், அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அண்மைக் காலமாக அமெரிக்காவில் இவ்வாறான சூட்டுச் சம்பவங்களில் சிக்கி மாணவர்கள் பலியாவது அதிகரித்து வருகின்றது. (அ)

# தீவிரவாதியின் மருத்துவமனை பாகிஸ்தான் அரசிடம்!

இஸ்லாமாபாத், பெப்.16

மும்பைத் தாக்குதல் தீவிரவாதி ஹபீஸ் சயீட் நடத்தும் மருத்துவமனைகளை பாகிஸ்தான் அரசு கையகப்படுத்தி உள்ளது.

மும்பைத் தாக்குதலில் மூளையாகச் செயற்பட்ட தீவிரவாதி ஹபீஸ் சயீது, பாகிஸ்தானில் சுதந்திரமாகத் திரிந்து வருகிறார். அவருக்கு எதிராக போதிய ஆதாரங்கள் இல்லை என்பதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் பாகிஸ்தான் வெளிப்படையாக அறிவித்திருந்தது. இதற்கு அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

மேலும் தீவிரவாதிகள் மீதும், தீவிரவாத அமைப்புகள் மீதும் பாகிஸ்தான் நடவடிக்கை எடுத்தே ஆக வேண்டும் என்று அமெரிக்காவும், ஐ.நா. பாதுகாப்புச் சபையும் கடும் நெருக்கடி கொடுத்தன. அதுமட்டுமல்லாமல் பாகிஸ்தானுக்கு, தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கைக்காக வழங்கப்படும் நிதியையும் அமெரிக்கா நிறுத்தி வைத்தது. தீவிரவாதிகளின் புகலிடமாகப் பாகிஸ் தான் இருக்கிறது என்றும் அமெரிக்கா பகிரங்கமாகக் குற்றம் சாட்டியது. இதைத் தொடர்ந்து தீவிரவாதிகள், தீவிரவாத அமைப்புகள் மீது நடவடிக்கை எடுப்பதில் பாகிஸ்தான் தீவிரம் காட்டி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக தீவிரவாதி ஹபீஸ் சயீட் நடத்தி வந்த மருத்துவமனைகள், மதரஸாக்களுக்கு தடை விதித்து, அவற்றைப் பாகிஸ்தான் அரசு கையகப்படுத்தியுள்ளது. (அ)



# அண்ணியார் கொலை

சென்னை, பெப்.16

சின்னத்திரை சீரியல்களில் ஒரு சில தொடர்கள் மட்டும் பல வருடங்கள் கடந்தும் வெற்றிகரமாக ஓடிவருகின்றன. அதில் குறிப்பிடத்தக்கது 'தெய்வமகள்' சீரியல்.

அதில் வில்லியாக உள்ள அண்ணியார் தற்போது மீண்டும் பிரகாஷால் கொலை செய்யப்படுவது போல காட்டப்பட்டுள்ளது. அதனால் இந்த சீரியல் இந்த வாரத்தோடு முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் இந்த சீரியலின் ரசிகர்கள் தற்போது சோகத்தில் உள்ளனர். (அ)

# ஐ.பி.எல் திருவிழா ஏப்ரல் 7 இல் ஆரம்பம்

புதுடெல்லி, பெப்.16

11 ஆவது ஐ.பி.எல்.கிரிக்கெட் போட்டிகள் ஏப்ரல் 7 அம் திகதி தொடங்குகின்றன. மும்பை வான்ஹடே மைதானத்தில் நடக்கும் முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணியை எதிர்கொள்கிறது முன்னாள் சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ்.

11ஆவது ஐ.பி.எல்.போட்டிகளுக்கான கால அட்டவணையை ஐ.பி.எல்.அமைப்பு நேற்றுமுன்தினம் இரவு வெளியிட்டது. இதில் 11 ஆவது ஐ.பி.எல்.போட்டிகள் முறைப்படி தொடக்கவிழா நிகழ்ச்சியுடன் ஏப்ரல் 6 ஆம் திகதி மும்பையில் தொடங்குகிறது. அதன் பின் 7 ஆம் திகதி முதல் போட்டிகள் தொடங்குகின்றன.

கிரிக்கெட் சூதாட்ட சர்ச்சையில் கடந்த 2 ஆண்டுகள் தடைவிதிக்கப்பட்டு விளையாட முடியாமல் இருந்த சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ்-அணிகள் இந்த முறை களமிறங்குவதால், ரசிகர்கள் மத்தியில் கூடுதல் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

11-வது ஐ.பி.எல்.போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ், டெல்லி டேர்டெவில்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் ஆகிய 8 அணிகள் களமிறங்குகின்றன.

போட்டி நடக்கும் நேரத்தில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. முதல் போட்டி மாலை 4 மணிக்கும், 2-வது போட்டி இரவு 8 மணிக்கு தொடங்கும்.

ஏப்ரல் 7-ம் திகதி மும்பையில் நடக்கும் முதலாவது ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணியை எதிர்கொள்கிறது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி.

போட்டி அட்டவணையில் எலிமினேட்டர் மற்றும் 2-ம் தகுதியாளர் (குவாலிபயர்2) ஆகியோருக்கான போட்டி நடக்கும் இடங்கள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இறுதி ஆட்டம் மும்பை வான்ஹடே மைதானத்திலேயே நடக்கிறது.

ஒட்டுமொத்தமாக இரவு நேரத்தில் 48 போட்டிகளும், 4 மணிக்கு நடப்பதில் 12 போட்டிகளும் என 60 ஆட்டங்கள் நடக்கின்றன.

ஒரே நாளில் இருஆட்டங்கள் நடக்கும் போட்டி ஏப்ரல் 8-ம் திகதி அன்றே தொடங்குகிறது. டெல்லியில் மாலை 4 மணிக்கு நடக்கும் முதலாவது ஆட்டத்தில் கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியை டெல்லி அணி எதிர்கொள்கிறது. பெங்களூரில் நடக்கும் 2ஆவது ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் அணியுடன் பெங்களூர் ரோயல் சேலஞ்சர்ஸ் அணி மோதுகிறது.

## போட்டி அட்டவணை:

**ஏப்.7[சனி]:**
அணிகள் :மும்பை இந்தியன்ஸ் சென்னை சுப்பர் கிங்ஸ்
இடம்:மும்பை, நேரம்: இரவு 8 மணி

**ஏப்.8[ஞாயிறு]:**
அணிகள்: டெல்லி டேர்டெவில்ஸ் / கிங்ஸ்லெவன் பஞ்சாப்
இடம்: டெல்லி, நேரம்: மாலை 4 மணி
அணிகள்: கொல்கத்தா நைட் ரைடர்ஸ் /ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்
இடம்: கொல்கத்தா, நேரம்: இரவு 8 மணி

**ஏப்.9[திங்கள்]:**
அணிகள்: சன் ரைசர்ஸ் ஹைதராபாத்/ ராஜஸ்தான் ரோயல்ஸ்
இடம்: ஐதராபாத், நேரம்: இரவு8 மணி

**ஏப்.10[செவ்வாய்]:**
அணிகள்: சென்னை சுப்பர் கிங்ஸ்/கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
இடம்: சென்னை, நேரம்: இரவு 8 மணி

**ஏப்.11[புதன்]:**
அணிகள்: ராஜஸ்தான் ரோயல்ஸ்/டெல்லி டேர்டெவில்ஸ்
இடம்: ஜெய்ப்பூர், நேரம்: இரவு 8 மணி

**ஏப்.12[வியாழன்]:**
அணிகள்: சன்ரைசர்ஸ் ஹைதராபாத்/ மும்பை இந்தியன்ஸ்
இடம்: ஐதராபாத், நேரம்: இரவு 8 மணி

**ஏப்.13[வெள்ளி]:**
அணிகள்: ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்/கிங்ஸ் லெவன் பஞ்சாப்
இடம்: பெங்களூரு, நேரம்: இரவு 8 மணி

**ஏப்.14[சனி]:**
மாலை 4 மணி: அணிகள்: மும்பை இந்தியன்ஸ்/டெல்லி டேர்டெவில்ஸ்
இடம்: மும்பை,
இரவு 8 மணி அணிகள்: கொல்கத்தா நைட் ரைடர்ஸ்/சன்ரைசர்ஸ் ஹைதராபாத் இடம்: கொல்கத்தா.

**ஏப்.15[ஞாயிறு]:**
அணிகள்: ராயல் சேலஞ்சர்ஸ்/ராஜஸ்தான் ரோயல்ஸ்
இடம்: பெங்களூர், நேரம்: மாலை 4 மணி
அணிகள்: கிங்ஸ் லெவன் பஞ்சாப்/சென்னை சுப்பர் கிங்ஸ்
இடம்: இந்தூர், நேரம்– இரவு 8 மணி

**ஏப்.16[திங்கள்]:**
அணிகள்: கொல்கத்தா நைட் ரைடர்ஸ்/டெல்லி டேர்டெவில்ஸ்
இடம்: கொல்கத்தா, நேரம்: இரவு 8 மணி

**ஏப்.17[செவ்வாய்]:**
அணிகள்: மும்பை இந்தியன்ஸ்/ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்
இடம்: மும்பை, நேரம்: இரவு 8 மணி

**ஏப்.18[புதன்]:**
அணிகள்: ராஜஸ்தான் ரோயல்ஸ்/ கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
இடம்: ஜெய்பூர், நேரம்: இரவு 8 மணி

**ஏப்.19[வியாழன்]:**
அணிகள்: கிங்ஸ் லெவன் பஞ்சாப்/ சன்ரைசர்ஸ் ஹைதராபாத்
இடம்: இந்தூர், நேரம்: இரவு 8 மணி

**ஏப்.20[வெள்ளி]:**
அணிகள்: சென்னை சுப்பர் கிங்ஸ்/ ராஜஸ்தான் ரோயல்ஸ்
இடம்: சென்னை, நேரம்: இரவு 8 மணி

**ஏப்.21[சனி]:**
அணிகள்: கொல்கத்தா நைட் ரைடர்ஸ்/கிங்ஸ்லெவன் பஞ்சாப்
இடம்: கொல்கத்தா, நேரம்: மாலை 4 மணி
அணிகள்: டெல்லி டேர்டெவில்ஸ்– ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்
இடம்: டெல்லி, நேரம்–இரவு 8 மணி

**ஏப்.22[ஞாயிறு]:**
அணிகள்: சென்னை சுப்பர் கிங்ஸ்/ சன் ரைசர்ஸ் ஐதராபாத்
இடம்: ஐதராபாத், நேரம்: மாலை 4 மணி
அணிகள்: ராஜஸ்தான் ரோயல்ஸ்– மும்பை இந்தியன்ஸ்
இடம்: ஜெய்ப்பூர், நேரம்: இரவு 8 மணி

**ஏப்.23[திங்கள்]:**
அணிகள்: கிங்ஸ் லெவன் பஞ்சாப்/ டெல்லி டேர்டெவில்ஸ்
இடம்: இந்தூர், நேரம்: இரவு 8 மணி

**ஏப்.24[செவ்வாய்]:**
அணிகள்: மும்பைஇந்தியன்ஸ்/சன்ரைசர்ஸ் ஹைதராபாத்
இடம்: மும்பை, நேரம்: இரவு 8 மணி

**ஏப்.25[புதன்]:**
அணிகள்: சென்னை சுப்பர் கிங்ஸ்/ ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்
இடம்: பெங்களூட், நேரம்: இரவு 8 மணி

**ஏப்.26[வியாழன்]:**
அணிகள்: சன்ரைசர்ஸ் ஹைதராபாத்/ கிங்ஸ் லெவன் பஞ்சாப்
இடம்: ஐதராபாத், நேரம்: இரவு 8 மணி

**ஏப்.27[வெள்ளி]:**
அணிகள்: டெல்லி டேர்டெவில்ஸ்/கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
இடம்: டெல்லி, நேரம்: இரவு 8 மணி

**ஏப்.28[சனி]:**
அணிகள்: சென்னை சுப்பர் கிங்ஸ்/ மும்பை இந்தியன்ஸ்
இடம்: சென்னை, நேரம்: இரவு 8 மணி

**ஏப்.29[ஞாயிறு]:**
அணிகள்: ராஜஸ்தான் ரோயல்ஸ்/ சன்ரைசர்ஸ் ஹைதராபாத்
இடம்: ஜெய்பூர், நேரம்: மாலை 4 மணி
அணிகள்: ரோயல் சலஞ்சர்ஸ்–கொல்கத்தா நைட்ரைடர்ஸ்
இடம்: பெங்களூட், நேரம் இரவு 8 மணி

**ஏப்.30[திங்கள்]:**
அணிகள்: சென்னை சுப்பர் கிங்ஸ்/ டெல்லி டேர்டெவில்ஸ்
இடம்: சென்னை, நேரம்: இரவு 8 மணி

**மே1[செவ்வாய்]:**
அணிகள்: ராயல் சலஞ்சர்ஸ்/மும்பை இந்தியன்ஸ்
இடம்: பெங்களூர், நேரம்: இரவு 8 மணி

**மே. 2 [புதன்]:**
அணிகள்: டெல்லி டேர்டெவில்ஸ்/ ராஜஸ்தான் ரோயல்ஸ்
இடம்: டெல்லி, நேரம்: இரவு 8 மணி

**மே 3 [வியாழன்]:**
அணிகள்: சென்னை சுப்பர் கிங்ஸ்/கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
இடம்: கொல்கத்தா, நேரம்: இரவு 8 மணி

**மே4[வெள்ளி]:**
அணிகள்: மும்பைஇந்தியன்ஸ்– கிங்ஸ் லெவன் பஞ்சாப்
இடம்: மொஹாலி, நேரம்: இரவு 8 மணி

**மே5[சனி]:**
அணிகள்: சென்னை சுப்பர் கிங்ஸ்/ ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்
இடம்: சென்னை, நேரம்: மாலை 4 மணி
அணிகள்: சன்ரைசர்ஸ் ஐதராபாத்– டெல்லி டேர்டெவில்ஸ்
இடம்: ஐதராபாத், நேரம்: இரவு 8 மணி

**மே6[ஞாயிறு]:**
அணிகள்: மும்பை இந்தியன்ஸ்/ கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
இடம்: மும்பை, நேரம்: மாலை 4 மணி
அணிகள்: கிங்ஸ் லெவன் பஞ்சாப்– ராஜஸ்தான் ரோயல்ஸ்
இடம்: மொஹாலி, நேரம்: இரவு 8 மணி

**மே7[திங்கள்]:**
அணிகள்: சன்ரைசர்ஸ் ஹைதராபாத்/ராயல் சலஞ்சர் பெங்களூரு
இடம்: ஐதராபாத், நேரம்: இரவு 8 மணி

**மே8[செவ்வாய்]:**
அணிகள்: ராஜஸ்தான் ரோயல்ஸ்/ கிங்ஸ் லெவன் பஞ்சாப்
இடம்: ஜெய்ப்பூர், நேரம்: இரவு 8 மணி

**மே9[புதன்]:**
அணிகள்: கொல்கத்தா நைட் ரைடர்ஸ்/மும்பை இந்தியன்ஸ்
இடம்: கொல்கத்தா, நேரம்: இரவு 8 மணி

**மே10[வியாழன்]:**
அணிகள்: டெல்லி டேர்டெவில்ஸ்/ சன்ரைசர்ஸ் ஹைதராபாத்
இடம்: டெல்லி, நேரம்: இரவு 8 மணி

**மே11[வெள்ளி]:**
அணிகள்: ராஜஸ்தான் ரோயல்ஸ்/ சென்னை சுப்பர் கிங்ஸ்
இடம்: ஜெய்ப்பூர், நேரம்: இரவு 8 மணி

**மே12[சனி]:**
அணிகள்: பஞ்சாப்/கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
இடம்: மொஹாலி, நேரம்: மாலை 4 மணி
அணிகள்: ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்–டெல்லி டேர்டெவில்ஸ்
இடம்: பெங்களூரு, நேரம்: இரவு 8 மணி

**மே13[ஞாயிறு]:**
அணிகள்: சென்னை சுப்பர் கிங்ஸ்/சன் ரைசர்ஸ் ஹைதர்பாத்
இடம்: சென்னை, நேரம்: மாலை 4 மணி
அணிகள்: மும்பை இந்தியன்ஸ்/ ராஜஸ்தான் ரோயல்ஸ்
இடம்: மும்பை, நேரம்: இரவு 8 மணி

**மே14[திங்கள்]:**
அணிகள்: கிங்ஸ் லெவன் பஞ்சாப்/ ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்
இடம்: மொஹாலி, நேரம்: இரவு 8 மணி

**மே15[செவ்வாய்]:**
அணிகள்: ராஜஸ்தான் ரோயல்ஸ்/கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
இடம்: கொல்கத்தா, நேரம்: இரவு 8 மணி

**மே16[புதன்]:**
அணிகள்: மும்பை இந்தியன்ஸ்/ கிங்ஸ் லெவன் பஞ்சாப்
இடம்: மும்பை, நேரம்: இரவு 8 மணி

**மே17[வியாழன்]:**
அணிகள்: ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்/சன்ரைசர்ஸ் ஹைதராபாத்
இடம்: பெங்களூருர், நேரம்: இரவு 8 மணி

**மே18[வெள்ளி]:**
அணிகள்: டெல்லி டேடெவில்ஸ்/ சென்னை சுப்பர் கிங்ஸ்
இடம்: டெல்லி, நேரம்: இரவு 8 மணி

**மே19[சனி]:**
அணிகள்: ராஜஸ்தான் ரோயல்ஸ்/ ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்
இடம்: ஜெய்ப்பூர், நேரம்:மாலை 4 மணி
அணிகள்: சன்ரைசர்ஸ் ஹைதராபாத்/ கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
இடம்: ஹைதராபாத், நேரம் இரவு 8 மணி

**மே20[ஞாயிறு]:**
அணிகள்: டெல்லி டேர்டெவில்ஸ்– மும்பை இந்தியன்ஸ்
இடம்: டெல்லி, நேரம் மாலை 4 மணி
அணிகள்: சென்னை சுப்பர் கிங்ஸ்– கிங்ஸ் லெவன் பஞ்சாப்
இடம்: சென்னை, நேரம் இரவு 8 மணி

**மே22[செவ்வாய்]**
முதலாம் தகுதிச்சுற்று
இடம் : மும்பை, நேரம் இரவு 8 மணி

**மே 23[புதன்]**
எலிமினேட்டர் சுற்று
இடம்: குறிப்பிடவில்லை : நேரம் இரவு 8 மணி

**மே 25[வெள்ளி]**
தகுதிச்சுற்று 2
இடம்:குறிப்பிடவில்லை, நேரம் இரவு 8 மணி

இறுதிப்போட்டி மே 27(ஞாயிறு)
இடம்: மும்பை, நேரம் இரவு 8மணி

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 16.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.